**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.
Calendar )
Preliminary Register) CC.461/2021
Sessions)

( Prosecution P.W.6-முனியராஜ்
Deposition of witness for (Defence
(Court

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 30th day of June 2025.

**குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் பிள்ளையார்நத்தம். அசா 1 முருகன் மற்றும் எனது ேஹாட்டல் முதலாளியும் உறவினர்கள். பிள்ளையார்நத்தத்திற்கும் நான் வேலை பார்க்கும் நிகனா ஸ்ரீ ேஹாட்டாலுக்கும் 1 கி.மீ தூரம் இருக்கும். சம்பவத்தன்று நான்தான் காலையில் சென்று ேஹாட்டலை திறந்தேன். அன்றைய தினம் நானும்எனது முதலாளியும் ேஹாட்டலுக்குள் வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். சத்தம் கேட்டுதான் ேஹாட்டலுக்கு இருந்து வந்து என்னவென்று பார்த்தோம். இறந்துபோன வீரபொம்முலு எனக்கு உறவினர் ஆவார். ேஹாட்டலுக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் சுமார் 20 மீ தூரம் இருக்கும். நான் சென்று தூக்கி பார்த்த பிறகுதான் விபத்தில் அடிப்பட்டது யார் என்று தெரிந்துக்கொண்டேன். நானும் எனது முதலாளி சதீஷ்குமாரும் சென்று பார்த்தோம். வேறு யாரும் இல்லை. 108 ஆம்புலன்சிற்கு நாங்கள் போன் செய்யவில்லை. நாங்கள் முருகனுக்குதான் போன் செய்தோம். முருகன் கால் மணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். நாங்கள் பார்த்தபோது வீரபொம்முலு உயிரோடு இல்லை. நான் முதல் விசாரணையில் அவர் காயமாக இருந்தார் என்று சொல்லியிருந்தால் அது சரியா தவறா என்றால் காயம் பட்டதா என்று கேட்டார்கள் நான் காயம்பட்டதாக சொன்னேன். போலீசார் விசாரிக்கும்போது அவர் பிரேதமாகத்தான் கிடந்ததாக சொன்னேன். நாங்கள் அவரை தூக்கும்போதே போலீசார் வந்துவிட்டார்கள். நான் போலீசாரிடம் இனம் தெரியாத வாகனம் மோதிவிட்டதாக சொன்னேன். குருசர் வாகனம் மோதிவிட்டதாக நான் பார்க்கவில்லை. போலீசார் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தார்கள்.

நான் சொன்னதுபோல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அசா1 கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 30th day of June 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**